# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON


"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்தளவு அதிகமான வற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கின்றான். ஏனென்றால், அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."


தெளிவு - 03 ஐப்பசி - கார்த்திகை - 2003 இதழ் - 05




# வாழ்க்கை வேறு ஆன்மீகம் வேறாகுமா?

கொழும்பு குருமுதல்வர்

**உலகின் கிறிஸ்துவின் நற்செய்திப் பணியை செயற்படுத்துவதே, கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையின் கடமை, அதன் அங்கத்தவர்களாகிய எமது செயல்கள் வேறுபட்டு இருப்பினும், எமது நோக்கமும், இலக்கும் ஒன்றே. அதாவது கடவுளின் திருவுள்ளத்தைநாடி கீழ்படிவதும், அவரது தூய நாமத்தை நாடி மாண்புறச் செய்வதுமே ஆகும்.**

இவ்வாறு 07.10.2003 அன்று கொழும்பு மறை மாவட்ட வருடாந்த அமர்வின், மாலை வழிபாட்டில் கொழும்பு குரு முதல்வர் அருட்பணி கொட்வின் வர்சூரிய அடிகளார் மறைவுரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் எமது பணிகள் யாவும் எமக்கூடாகக் கடவுள் ஆற்றும் பணி, அவர் அரசை இவ்வுலகில் கட்ட அற்பண பக்திச் செயற்பாடு போன்றன, எமது வாழ்வில் வெளிப்பட வேண்டும்.

நாம் கடவுளின் உடன் பணியாளர்கள், அவர் திட்டம் நோக்கம் நிறைவேற, எமது பங்களிப்பு நற்பணியின் முதற்கட்டம். திருச்சபையின் நற்செய்திப்பணி திருச்சபையின் சுபாவத்துடன் மிக நெருங்கியது. சுபாவம் வேறு நற்செய்திப்பணி வேறல்ல, பிசைந்த மாவைப் புளிக்க வைக்கும் சுபாவம் இதன் வெளிப்பாடு.

இறை நற்செய்தி, பணி வாழ்வாக மலர வேண்டும். இன்று நீண்ட திட்டமிடலும், அதை நிறைவேற்ற அர்ப்பணிப்பு இல்லா வாழ்வும் திருச்சபைப்பணியாளர்களிடம் காணப்படுகிறது. ஆகவே; பாரிய செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் செய்து முடிப்பதே சிறந்தது

எமது நற்செய்திப் பணி அயலில் உள்ளங்களுக்கு தொண்டாற்றுவது ஆகும். வரட்சி மண் சரிவு, வெள்ளப் பெருக்கு போன்ற இயற்கை அழிவுகளினாலும், யுத்த அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மதம் கடந்து செயற்படுவதும் சிறந்த பணியாகும்.

## தபால் மூலம் இறை தேடல்

யாழ்.திருச்சபை திருப்பணி மன்றத்தின் ஆதரவில் தபால் மூலம், வேதாகம அறிவினை மக்களுக்கு கொடுக்க அருட்பணி A.ஸ்ரீபன், அருட்பணி எஸ்.டி.பி. செல்வன் முன்வந்திருக்கிறார்கள்.

இறையாட்சி தேடல் என்ற கருபொருளின் கீழ் விசுவாசம், திருமறை, திருப்பணி, அதிகாரம், சூழ் நிலைமயமாதல், வறுமை, துன்பம், திருச்சபை ஒருமைப்பாடு, பிறமதங்களுடனான ஐக்கியம் என்ற பத்துத் தலைப்புக்களில் பத்துச் சிறிய கையடக்கமான புத்தகங்கள் இக்கல்வியூட்டலுக்காக வெளி வருகின்றது.

இந்நூல்களில் குறிப்பிட்ட தலைப்பை விளங்கப்படுத்தும் சில கதைகள், திருமறை அடிப்படையிலான விளக்கம், நாம் வாழும் யதார்த்த நிலை, இவற்றைக் குறித்து கற்போரின் சிந்தனைக்கு சில கருத்துக்கள், கற்போரின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புத்தூக்கம் பெற்ற இறையியல் மாநாடு

ஒன்றியத்தலைவர்

1907 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், பல தன்னிகரற்ற தலைவர்களின் வழி நடத்தலினால் பல சிறப்பான காரியங்களை சபைக்கிடையில் ஒன்றிப்புடன் நடத்தி வந்துள்ளது. அதாவது உயர்மீட்சிக் கூட்டங்களும், உடுவில் இறையியல் மாநாடுகளும் குறிப்பிடத்தக்கவை. இன்று ஆரம்பிக்கப் படும் இந்த இறையில் மாநாட்டை தமிழில் நடாத்துவது யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் கன்னி முயற்சியாகும்.

இவ்வாறு 14.07.2003 அன்று கிளிநொச்சி, கருணா நிலையத்தில் நடைபெற்ற இறையியல் மாநாட்டில், யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் அருட்பணி N.J.ஞானப் பொன்ராஜா அடிகளார் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

மாறி வரும் சமூகத்திற்கு எமது இறையியல் என்னும் தலைப்பில் நடைபெற்ற இவ் இறையியல் மாநாடு, மூன்று நாட்கள் நடைபெற்றன. இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தமிழில் நடைபெற்ற முதல் மகாநாடு ஆகும்.

அவர் மேலும் உரையாற்றுகையில், உடுவில் இறையியல் மாநாடு

(2ஆம் பக்கம் பார்க்க)

## இறை அன்பை சுவைக்க...

அருட்பணி யோசுவா இரத்தினம்

சுயமதிப்பு இன்மையே பகை, பொறாமை, போன்ற உணர்வுகளுக்கு காரணம் என்று மனோவியலாளர் கூறகின்றார்கள். பகை, பொறாமை, என்ற இந்த அசிங்கமான உணர்வுகளில் இருந்து நாம் விடுதலை பெறுவது எப்போது? தன்னைப் பற்றிய சுயமதிப்பு உருவாகும் போதுதான் ஒருவர் இத்தகைய அசிங்க உணர்வுகளிலிருந்து விடுபட முடியும்.

இவ்வாறு 10.10.2003 அன்று கொழும்பு மறை மாவட்ட வருடாந்த அமர்வின், காலை வேதப்படிப்பின் போது, அருட்பணி யோசுவா இரத்தினம் அடிகளார் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் நான் கடவுளின் படைப்பில் தனித்துவமானவன், கடவுளால் அன்பு செய்யப்படுபவன், அவர் திருவுள்ளம் எனக்கூடாக நிறைவேறுகிறது. என்ற அறிவால் இந்த சுயமதிப்பு உருவாகும் போது ஒருவருக்கு அசிங்கத்தில் இருந்த விடுதலை கிடைக்கும்.

சுயமதிப்பு என்பது ஒருவர் தனது உண்மையான, சுயத்தை ஏற்றுக்கொள்வது. ஒரு நபருக்கு இரண்டு சுயங்கள் உள்ளது. ஒன்று உண்மையானது, மற்றையது இலட்சிய அடிப்படையானது. இலட்சிய அடிப்படையான சுயத்தை அந்த இலட்சிய நானை ஒருவர் ஒருபோதும் அடைய முடிவதில்லை. எனவே ஒருவருக்கு எரிச்சலும், கசப்பும், வெறுப்பும், ஏமாற்றமும் உருவாகிறது.

ஆனால் சுயமதிப்பு உண்மைச் சுயத்தை ஏற்றுக் கொள்வதால் உருவாகிறது. தனது திறன்கள் ஏற்றுக்கொள்வதே உண்மைச் சுயத்தை ஏற்றுக்ககொள்வது என்ப

(2 ஆம் பக்கம் பார்க்க...)

## புனரமைக்கப்படும் மெதடிஸ்த ஆலயம்

யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகாமையில் உள்ள மெதடிஸ்த புனித பேதுரு ஆலயம் 1990 ஆம் ஆண்டு, குண்டுத்தாக்குதலினால் தரைமட்டமாக்கப்பட்டது, 13 வருடங்களுக்கு பின்பு அதே இடத்தில், கொரியா மெதடிஸ்த திருச்சபையின் உதவித்திட்டத்தினால் புதுப் பொலிவுடன் கட்டியெழுப்படுகின்றது.

1823 ஆம் ஆண்டு மாசி மாதம் 19 ஆம் திகதி பிரதிஷ்டை செய்யப்பட்டு, வழிபாட்டுக்காக திறந்து வைக்கப்பட்ட இவ்ஆலயம், ஆன்மீக வளர்ச்சியையும் எழுச்சியையும் தூண்டும் கருவியாக யாழ் மத்தியில் அமைந்து காணப்பட்டது.

மீண்டும் 2004 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் வழிபாட்டுக்காக இவ் ஆலயம் பயன்படுத்தப்படும் என்று, அருடபணி கருணாசேகர குறிப்பிட்டார்.அவரது தலைமையில் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்லங்கள் தோறும் நூலகம் அமைப்போமா?

எழுத்தாளர் ஜோசப்பாலா

இல்லங்கள் தோறும் வாசிப்ப மையங்கள் உருவாக வேண்டும். பரீட்சை, படிப்பு, ரியூசன் என்று அலையும் மாணவர்களிடம் பொது அறிவு மிகவும் குறுகியதற்கு வாசிப்புத்தூண்டல் அருகி வருவதே மிக முக்கிய காரணமாகும். எல்லோர் இல்லங்களில் உணவு பரிமாறும் பாத்திரங்களை விருந்தி னர் கூடும் வரவேற்பு அறைகளில் அழகுபடுத்தி வைப்பதில் உள்ள ஆர்வம், நல்ல நூல்களை சேகரித்து, வாசிக்கும் சூழலை உருவாக்கினால், இல்லம் தோறும் நூலகம் நல் அறிவூட்டும் மாடங்களாக திகழும்.

(2 ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்தவ விவகார அமைச்சு

கிறிஸ்தவ விவகார அமைச்சு தேசிய கிறிஸ்தவ மன்ற சபைகளுடனோ, எமது மறை மாவட்டத்தினருடனோ, முன் ஆலோசிக்கப்படமால் அமைக்கப்பட்டது. இதன் நோக்கங்கள் குறித்து, அல்லது அதன் தேவை குறித்து எமக்கு இன்னும்தெளிவில்லை, தற்போது நிலை கொண்டுள்ள அரசின் அமைப்புக்களுக்கூடால், நாம் கடமை செய்ய விரும்புகிறோம்.

அரசின் குறைகளைச் சுட்டிக் காட்டும் எமது தன்னுரிமை, சுதந்திரம், உத்தரவாதத்தை நாம் மதிக்கிறோம். ஆனால் இப்பகுதிகளுக்குள் மாத்திரம் எம்மைக் கட்டுப்படுத்துவதை நாம் விரும்பவில்லை.

தேசிய கிறிஸ்தவ மன்றத்துடன் இணைந்த சபைகள் இது குறித்து எடுத்த முழு மறு சீராய்வின் பதிலிற்காகக் காத்திருக்கிறோம்.

இவ்வாறு கொழும்பு மறை மாவட்ட வருடாந்த அமர்வு 08.10.2003 அன்று ஆரம்பமாகி இரண்டுநாட்கள் நடைபெற்றது. இதில் கொழும்பு மறை மாவட்ட ஆயர் அதி.வண. டுலிப்.டீ.சிக்கரே - ஆண்டகை தமது உரையில் தெரிவித்தார்.

## அன்னை தெரேசாவுக்கு அருளாளர் பட்டம்



1910 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடான அல்போனியாவில் அன்னை தெரேசா பிறந்தார். இவர் தமது இளம் வயதிலேயே மதப்பணியாற்றுவதற்காக இந்தியாவுக்குச் சென்றார். ஏழ்மையில் வாடும் இந்திய மக்களைக் கண்ணுற்ற இவர் 1940 களின் இறுதியில் கிறிஸ்தவ மிசனறியைத் துறந்து சமூக சேவை செய்யப் புறப்பட்டார்.

அன்புப் பணியாளர் சபை என்னும் அமைப்பை 1950 இல் அமைத்தார்.

சுவிடன் தேசத்தில் இயங்கும் ரோயல் சுவிடிஷ் அக்கடமி 1979

(4 ஆம் பக்கம் பார்க்க)

## திருச்சபை வரலாற்றில் திருப்புமுனை திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல்...



இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த தலைவர் என்று உலகத் தலைவர்கள் பலராலும் பராட்டப்பட்டுள்ள திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல் 100 கோடி கத்தோலிக்க மக்களின் ஆன்மீகத் தலைவா.

இவர் திருச்சபை வரலாற்றில் சாதனைகள் பல புரிந்தவராவர். மரபுகள், சம்பிரதாயங்கள் போன்ற கட்டுக்களை உடைத்து, பன்னூற்றாண்டு கால வரலாற்றிலே இத்தாலிக்கு வெளியே இருந்து வந்த முதலாவது திருத்தந்தையாக 2 ஆம் யோவான் பவுல் விளங்குகின்றார். உலகம் எதிர்பாராதவாறு கிழக்கைரோப்பிய கம்யூனிச நாடான போலந்திலிருந்து திருத்தந்தை தெரிவானது ஓர் ஆச்சரியம் நிறைந்த நிகழ்வு.

திருந்தந்தையின் குருத்துவ அழைத்தலுக்கு பக்கபலமாக இருந்தவர் கருதினால் சாபியா. இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலகட்டத்தில் ஜேர்மனிப் படைகள் போலந்தை முற்றுகையிட்டு சித்தரவதை, இனப்படுகொலை புரிந்த பொழுதும் அவற்றை எதிர் கொண்டு குருத்துவப் படிப்பை தொடந்தவர். இறுதியில் 1946 ஆம் ஆண்டு குருவாக பணியேற்று, பல நாடுகளிலும் அகதிகளுக்கு தொண்டாற்றி, தமது நாட்டில் கம்யூனிச அரசு பல இடர்களை விளைவித்த போதும் அதனையும் எதிர்கொண்டு பணி யாற்றி வெற்றியும் கண்டார். விடா முயற்சியும், கடின உழைப்பும் தெளிந்த சிந்தனையும் சிறந்த செயலாட்சித்திறன் எல்லாவற்றுக்கும் மேலாக அவரிடம் ஊறிப்போ

(2 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறியோரை என்னிடம் வரவிடுங்கள்

ஆரம்பம்: 23 யுன் 2001, சென்.ஜேம்ஸ் ஆலயம், நல்லூர்

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONERY CHURCH OF CEYLON

## தெளிவுரை

ஒரு மனிதர் வழியாகச் சாவு
வந்தது போல ஒரு மனிதர்
வழியாவே இறந்தோர்
உயிர்த்தெழுந்தனர்.
ஆதாமை முன்னிட்டு அனைவரும்
சாவுக்குள்ளானது போலக்
கிறிஸ்துவை முன்னிட்டு
அனைவரும் உயிர் பெறுவர்.
(1கொரி 15: 21-22)

சாவுக்குப் பின் வாழும்
சரித்திர நாயகர்கள் பலரை
நினைவு கூரும் காலம்
சமூகத்தில் பரவலாக
நிகழ்கின்றது.

மனிதர்களாக வாழ்ந்து
புனிதர்களாக மாறும்
பணிவாழ்வை மீட்டுப்பார்ப்போர்,
வழிகாட்டிகள் என்றும்,
முன்மாதிரிகள் என்றும்,
புனிதப் பிறப்பைப் பூசிப்போர்
செய்த சாதனைதான் என்ன?

சுயலநலம் - சுரண்டல் -
கேளிக்கை
உலகமாயைகள் கடந்ததால்
காலமெல்லாம் நினைவு
கூறப்படுகின்றார்கள்.
இறப்புக்கள் வாழ்வின் முடிவல்ல
வாழும் போதே இறந்தவராக
வாழ்வோருக்கு வழிகாட்டி
நிற்போர் - வாழ்வுக்கு
இறை நம்பிக்கையுடன்
வாழ்ந்து காட்டியவர்கள்.

வாழ்வே மனிதத்தை
வாழவைத்தது
இறந்தோரை நினைக்கும்
காலத்தில்
இருப்போரே சிந்தியுங்கள்
சாவுக்குப்பின் வாழ்வைக் காண
ஏது செய்தோம்!
ஏது செய்வோம்.
மனிதம் எனும் தீபத்தை
ஏற்றிவைத்து, ஒளியூட்டும்
திரிகளாக, மெழுகாக
தம்மை உருக்கி ஒளியூட்டிய
வாழ்வே நினைக்கத்
தூண்டுகிறது.

நாம் ஏது செய்தோம் என
சிந்திக்கும் காலத்தை விட்டு
நாம் ஏது செய்வோம் - என
சமூகத்தில் மனிதம் வாழ
எமது வாழும் காலத்தை
பயனுள்ளதாக்கிக் கொள்வோம்.

உயிர்ப்புள்ள இறைவாழ்வை
அர்த்தமூட்டி வாழும் போது
சாவுக்கும் அர்த்தமிருக்கும்
சாவுக்கு பின் வாழ்வுக்கும்
மனிதம் தேடும் புனிதம் புலப்படும்.

நடைப்பிணங்களாக அல்ல
நல்லறிவுள்ள மனிதத்தைக் காத்து
இல்லாத காலத்தை விட
இருக்கும் காலத்தை
இறை தேடலுக்கு அர்த்தமூட்டும
நினைவுப் பணிகளால்
ஒருவர் மற்றவருக்காய்
மனிதம் மலர
உழைக்கும் போது,

சாவுக்கும் அர்த்தமிருக்கும்
மனித மாண்புக்கும்
நினைவு வாழ்வுக்கும்
சாதனை மிக்க
சரித்திரமுண்டு - இதில்
இறந்தோரை நினைவு
கூரும் போது
இருப்போரே
உயிர்ப்போடு இறைவாழ்வுக்கு
அர்த்தமூட்டுவோமா?

ஆக்கங்கள் எழுதுங்கள்
தெளிவு கண்டு பிரசுரிப்போம்.

தெளிவு
யாழ்.குருமுதல்வர்
காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூ.5/=

# சமத்துவமான சமூகத்தை உருவாக்கும் மையமாக
# கிறிஸ்தவம் திகழவேண்டும்

இலங்கை திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட வருடார்ந்த அமர்வுகள், இவ்வருடம் ஒக்டோபர் 8 ஆம், 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இவ் அமர்வின் முதலாம் நாள் நிகழ்வில் ஆயர் அதி.வண. டுலிப் டி சிக்கேரா ஆண்டகை ஆற்றிய உரையின் சுருக்கும் இதோ........



**நா**ம் எமக்குள் மரித்து, கிறித்துவுக்குள் மறுபடியும் உயிர்த்தெழும்பும் போது எமது மனப்பான்மைகள் மதிப்பீடுகள் வாழ்க்கை நெறிகள் உறவுகள் கிறிஸ்த்துவின் எண்ணத்தோடும், சிந்தையோடும் இணைந்து போகக்கூடிய முறையில் முன்னேற்றம் காண்கிறது. எமது இறைவாக்கு, அறை கூவல்கள் சமுதாய வட்டத்திற்கு ஒன்று திரட்டப்பட்டு செலாற்றப்படவேண்டும். ஏதோ ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதால் கிறிஸ்துவுக்குள் எமது வாழ்வையும் ஆன்மீகத்தையும் வைதது்க்கொள்வது பிழையாக வழிநடத்தப்படுதலே.

நாம் ஒன்றிணையும் சபைகளின் நம்பிக்கையும், தோழமையும் உருவாக்கவேண்டும். அங்கிளிக்கன் சபையை உள்ளடக்கிய அனைத்துச் சபைகளும் முழுச்சபையின் ஒரு சிறுதடம். தாழ்மையுடன் கிறிஸ்து அடுத்தவர் மத்தியில் பணியாற்றுகிறார் என்பதை மேன்மையுடன் ஏற்றுக்கொள்கிறோம். எனவே நம்பிக்கையின் நல்லுறவுகளுடனும், நல்லெண்ணத்துடனும், மற்றைய கிறிஸ்தவர்களுடன் சபைகளுடனும் எமக்குரிய கதைகளை, கிறிஸ்துவில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை நாம் ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பொதுவாக இப்படியான உரையாடல்கள், கிறிஸ்துவினிமித்தம் எம்மை கூட்டுறவிற்குள் அழைத்துச் செல்கின்றது. எமது துணைவளங்களை பகிர்வதில் பொதுவாகச் சாட்சியாய் அடையாளம் காட்டுவதற்கான விருப்ப நடத்தைகள் எமது கருத்தாழமுடைய நன்மைகளுக்குச் சான்று பகரும். ஆண்டவருடைய மன்றாடுதலுக்கு கீழ்ப்படிந்து சான்று பகரும் புதிய வழிகளை உற்று நோக்கி, பிளவு பட்ட உலகம் நம்பும் வண்ணம் கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றானவர் என்பதை வெளிப்படுத்துவோம்.

அனைத்து மதங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு, உரையாடல் இவறறை நாம் வரவேற்க வேண்டும்.

பல தசாப்பதங்களாக, மற்றைய மதங்களுடன் எம்மில் பலர் வாழ்வுள்ள உரையாடல்களை நடாத்தி வந்துள்ளோம்.

கடமையிலும், கல்வியிலும் ஈடுபட்டுள்ள எமது குடும்பத்தினர், நண்பர்கள், அயலவர்கள், தோழர்கள் யாவரும் மற்றைய மதங்களைச் சார்ந்த எம் சகோதர சகோதரரிகள். முன்னே பிரிந்து தனித்து வாழ்ந்து அனுபவப்பட்ட அநேகர் யுத்தத்தினால் ஏற்பட்ட இடப்பெயர்வின் நிமித்தம், கலாசாரங்கள் அசைந்து தழுவிய போதும் புலம் பெயர்வு ஏற்படுத்திய புதிய வேலை வாய்ப்பு, வர்த்தகம், வியாபாரம் போன்றவை மதங்களுக்கிடையிலான ஒரு புதிய உறவின் அனுகூலங்களை முகங்கொடுக்கும் சவால்களாக ஏற்படுத்தியும், இந்த எதிர்பாரத சந்திப்புக்களில் அநேகர் ஒருவரிடமிருந்து ஒருவர் பலத்தையும் மனித இரக்கம் நட்பு போன்றவற்றை ஒருவருக்கொருவர் கொடுத்தும் பெற்றும் கொண்டனர். எமது சொந்த மதச்சார்பான உறுப்பிணைவுடன், மனுக்குலத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும், பொதுவாக அறைகூவல்களையும் ஒன்றாக வாழ்ந்து சந்திக்கிறோம். கடந்த வருடங்களுக்கூடாக திருப்பணியாளர்களும், இறை பணியாளர்களும், மற்றை மதத்தலைவர்களுடன் மரபொத்த இணைப்புக்களை கட்டியுள்ளனர். யுத்தம் சமீபத்திய வரட்சி, அனர்தங்கள் ஏற்பட்டபோது இப்படியான இணைப்புத் தன்மை, பயன்தரக் கூடிய முறையில் தேவைகளைச் சந்திக்க மரபுவழி இணைப்புத் தன்மைகளும் மேலும், எமது மறைமாவட்ட ரீதியில் பலமடைந்து, பாரிய விடயங்களான அமைதி, ஏழ்மை, ஊழல், குற்றம் ஆகியவற்றை முகங்கொடுக்க முன்னேற்பாடு செய்துள்ளது. இப்படியான விடங்களின் பரிமாணம் அனைவரின் பாரச் சுமைகளை குறைப்பதற்கு மத நம்பிக்கையுள்ளோர் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டுமென கோருகின்றது. இப்படியான ஒத்துழைப்பு அனைத்து மதங்களும் சமத்துவமானவையல்ல எனக்குறிப்பிட்டுக் காட்டவில்லை. அல்லது எமது நற்பணியின் மற்றைய பகுதிகளைக் கட்டுப்படுத்தவில்லை. மற்றைய மதத்தைச் சேர்ந்த எமது சகோதர சகோதரிகள்கூட, சகல மதங்களும் ஒன்றென கட்டாயப்படுத்திக்கூற மாட்டார்கள். ஒத்துழைப்பினால் அனைத்து மதங்களினதும் நற்பணி தடுத்து வைக்கப்பட முடியாது என்றும் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். எனவே இப்படியான பாகுபாடுகள் உரையாடலையும் ஒத்துழைப்பையும் அதிக அக்கறை கொண்டதாகவும் அறை கூவல் விடுவதாகவும் வெகுமானம் அளிப்பதாகவும் ஏற்படுத்தும்.

திருச்சபையின் சிறப்பியல்பிற்கும் நற்பணிக்குமான கூட்டு மொத்தமான கொடை நற்செய்தியிலும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு உகந்தது. அடித்தளமிட்ட ஆன்மீகம் இவ்வான்மீகம் எம்மைச் சகல காலங்களிலும் தாங்கி உள்ளான வலிமையை வழங்கும். எம்மைச் சூழவுள்ளவிடயங்கள் எம்மைக் கீழ்ப்படுத்தும் வேளையில் நாம் கிறிஸ்த்துவின் சிந்தனையைப் பின்தொடக் கற்றுக்கொள்வோம். இவை நாளைய அறைகூவல்கள், எவை எப்படிப்பட்டவையாயிருப்பினும் அவற்றைச் சந்திக்க ஊட்டமளிக்கும்.

"சமாதானத்தைக் குலைப்பவர்களோடு, நான் நெடுநாள் வாழவேண்டியதாயிற்று. நான் சமாதானத்தை நாடுவேன். அதைப்பற்றியே பேசுவேன். ஆனால் அவர்களுக்கோ போர் ஒன்றில்தான் நாட்டம்!

திருப்பாடல்கள் 120: 6+7

பேச்சுவார்த்தைகளில் உண்டாயிருக்கும் நடப்பிலுள்ள தப்பிக்க முடியாத நிலை. மிகவும் கவனமாக பகுப்பாய்வு தேவைப்படுகிறது.

இராணுவ ரீதியில் தோற்கடிக்கப்பட முடியாத இரு சக்திகளுக்கிடையில் நடைபெறும் பேச்சுவார்த்தையின் உள்நோக்கமொன்றை தந்துள்ளார். பேச்சு வார்த்தையின் ஆரம்பக் கூட்டத்தில் தோற்கடிக்கப்படாத நிலை என்ற கருத்துப்படிவம், நிச்சயமாக வெளிப்படும். பேச்சுவார்த்தைக்காக மேசைக்கு வரும்போது அதிகாரத்தோடும் வாழ்க்கை முறையைப் பின்பற்வோர் அதிகாரத்திற்கும் அதன் கட்டுப்பாட்டுக்குமான போராட்டத்திலுள்ளவர்கள் அதைவிட்டுக்கொடுக்க மாட்டார்கள். இரு பகுதியினருக்கும் தமது தொகுதியினரின் நம்பிக்கையை தக்கவைப்பதற்கு சகல முயற்சிகளும் எடுப்பர் என எதிர்பார்க்கலாம். அவர்களை அதற்ற தருணம் பார்ப்பவரும் அவ்விடங்களில் அடக்கலாம். எனவே நமக்குத் தோன்றும் வழமையான அடையாளங்கள், அதிகாரம் ஒத்துக் கொள்ளப்படக்கூடியதோ சமரச இணக்கத்திற்குரியதோ அல்ல. அதிலும் பார்க்க அது பிடி நழுவாததும் வெற்றியடைந்ததையும் எதிர்பார்க்கின்றது. ஒரு புறத்தில் அதிகாரத்தைப் பகிர்வதும், வெற்றியடைவதும் அல்லது மறுபுறத்தில் அதை வலுப்படுத்துவதும் சில பின்னடைவுகளும் ஏக்கங்களையும் ஏற்படுத்தும் இரு வகையான இடையூறுக்கு தற்போது முகங்கொடுக்கப்படுகிறது.

## உறவுகளின் நினைவுகளோடு...

மாண்டவர் நினைவை மறந்திடில் நாம்
இறந்ததும் எம்மை நினைத்திடயாருளர்.
பூண்ட நல் உறவும் அறிவாசானுடன் குருவும்
தேசத்தின் வீரரும் துயில்கிறார் கல்லறை தனில்
ஆண்டவன் நிழலில் சேர்ந்திட இறைஞ்சும்
கார்த்திகைத் திங்களிது கர்த்தனைக் கருத்தாய்
வேண்டுதல் புரிவோம் பாவவிடுதலை பெற்று
விண்ணக மகிமை நிறை வாழ்வது அடைய.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை.

## திருச்சபை வரலாற்றில்.......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்த இறையியல் நம்பிக்கை. இதனாலேயே 1958 ஆம் ஆண்டு ஆயராகவும், 1963 ஆம் ஆண்டு பேராயராகவும், 1967 ஆம் ஆண்டு கருதினால் ஆகவும், 1978 ஆம் ஆண்டு திருத்தந்தையாகவும் உயர்த்தப்பட்டு உலகம் போற்றும் தலைவராக இன்றும் விளங்குகின்றார்.

திருத்தந்தையாக பதவி ஏற்று 25 வருட காலத்தில் புரிந்த சாதனைகள் அளவிடமுடியாதவை. கவிஞரும் எழுத்தாளருமான 2 ஆம் யோவான் பவுல் ஏராளமான கவிதைகளையும், கட்டு ரைகளையும் எழுதியுள்ளார்.

அத்துடன் சுற்று மடல்களை இவரே வரலாற்றில் அதிகமாக எழுதியுள்ளார். அவற்றின் ஊடாக பொதுநிலையினருக்கு முக்கியத்தும் நிறைந்த படிப்பினைகளை ஊட்டுகின்றார்.

திருத்தந்தை 6 ஆம் சின்னப்பர்தான் முதன்முதல் விமானத்தில் பறந்த பாப்பரசராகவும், ஐந்து கண்டங்களை தரிசித்த பாப்பரசராகவும் சாதனை நிலைநாட்டினார். ஆனால் அவரது வழிவந்த திருத்தந்தை 2 ஆம் யோவான் பவுல் முன்னைய திருத்தந்தையர்கள், பயணச்சாதனைகள் அனைத்தையும் முறியடித்தது, மட்டுமன்றி நூற்றுக்கு மேற் பட்ட பயணங்களை செய்துள்ள பாப்பரசராகவும் உள்ளார்.

இத்தாலிலும் வெளியிலும் அவர் பயணம் செய்துள்ள தூரத்தைக் கணக்கிடும்போது, பூமிக்கும் - சந்திரனுக்கும் இடையில் பயணம் செய்யும் தூரத்தைவிட அதிகம் எனக் கணக்கிடப்படுகின்றது. தலத் திருச்சபைகளைத் தரிசித்து ஊக்கப்படுத்தும் மேய்ப்புப் பணியாக இப்பயணங்கள் திகழ்கின்றது.

இவ்வருடம் ஒக்டோபர் மாதம் திருத்தந்தையாக பதவி ஏற்று, 25 வருடங்கள் நிறைவு செய்யும் 84 வயதை அடைந்துள்ள திருத் தந்தை 2 ஆம் யோவான் பவுல் தளராத உள்ளத்தோடும் ஆன்மீகப் பலத்துடனும் நீண்டகாலம் வாழ்ந்து பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

## இறை அன்பை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகும்.

அதேநேரம் பூரணத்துவத்தையும், புனிதத்துவத்தையும் அடையத் தனக்குள் இருக்கும் சக்தியையும் ஒருவர் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடவுள் என் மீது நிபந்தனையின்றி அன்பு செலுத்துகிறார். என்று அவர் அருள் மீது ஒருவருக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். நிபந்தனையில்லா பற்றுறுதி ஏற்படவேண்டும்.

கடவுள் என்னில் அன்பு செய்கிறார், என்ற நம்பிக்கை ஒருவருக்கு உருவாகி னால் மட்டுமே, நான் என்னில் அன்பு செய் யலாம். நான் என்னில் அன்பு செய்தால் மட்டுமே, பிறரில் அன்பு செய்யலாம் என்றார்.

## புத்தூக்கம் பெற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி..........)

50 , 60 களில் மிகவும் சிறப்பாக சர்வதேச இறையியல் அறிஞர்கள் கலந்து கொண்டு 6-7 நாட்களாக ஆங்கிலத்தில் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்று வந்தது.

உடுவில் மாநாடு கடந்த சில தசாப்தங்களாக நடைபெறாமல் போனது வேதனைக்குரியது ஆகும். ஆனால் இந்த உடுவில் மாநாடு கடந்த 2002 ஆம் வருடம் ஆடி மாதம் 16,17 ஆம் திகதிகளில் மருதனார்மடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தில் மீண்டும் ஆங்கிலத் தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப காலத்தில் இருந்து உடுவில் மாநாட்டிற்கு உழைத்த, இறை யியலாளரான வண.கலாநிதி D.T நைல்ஸ் அடிகளார் மறுமைக் குள் பிரவேசித்த ஆடி மாதம் 17 ஆம் திகதியை உள்ளடக்கி மாநாடு நடத்தப்படுவது மிகவும் பொருத்த மானதாகும்.

தமிழ் மக்களுக்கான இறையி யலை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக இவ்வாண்டு இறையி யல் மாநாடு தமிழில் நடாத்தப்படுகிறது. ஆகவே இந்த இறையியல் மாநாட்டில் பங்கு கொண்டு மாறிவரும் சமூகத்திற்கு எமது இறையி யலை கண்டுகொள்வோம் என்றார்.

## இல்லங்கள் தோறும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு யாழ் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் அதிபர் யோலன் தலைமையில் நடைபெற்ற நூலக வார நிகழ்வில் சிறப்புரை ஆற்றிய எழுத்தாளர் யோசப்பாலா அவர்கள் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகை யில், தொலைக்காட்சிகள் தனது தெரிவுகளுக்குள் மக்னளை முடக் கிவிடுகிறது. நூலக வாசிப்புக்கள் தமக்கு ஏற்ற தெரிவுகளை தாமே தெரிந்து கொள்ள சுவைப்பதில் சுதந்திர வாசிப்புக்கு வித்திடுகிறது. இதனால் மாணவரின் பொது அறிவு, சமூகக்கல்வி, தமிழ் போன்ற கல்வி அறிவோடு புதிய கற்பனை வளங்களும் பெருக வாய்ப்புண்டு.

பொதுவாசிப்பில் ஈடுபடாத மாணவர்கள் இலக்கிய களவில் கூட ஈடுபடுவதை உணர்வதில்லை. சிலர் பாரதி பாடலை கூட எழுதி விட்டு தமது பெயரைப் போட்டு இலக்கியக் களவு செய்வதை உணர்வதில்லை எம் மாணவர்கள் தம்கற் பனை திறனைத் தூண்டவும் பொது அறிவை வளர்க்கவும் வாசிப்புக்களை தேர்ந்து தெரிந்து உணர்ந்து கொள்ளவும் நூலகங்களில் வளங்களை பயன்படுத்தி எம் அறிவை பெருக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமூகம் விழிப்படைய கல்விச்சாலைகள் பெருகவேண்டும்

## அருட்கலாநிதி. றெக்ஸ் யோசப்

**புசல்லாவை புனித திருத்துவ தேவால யத்தின் பங்குத் தந்தையும், பிலிமத்தலாவை இறையியல் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும், மலையக சமூக முன்னேற்றதுக்காக சர்வமத ஒன்றியத்தினை ஸ்தாபித்தவர்களுள் ஒருவரும், சிறந்த எழுத்தாளருமான அருட்கலாநிதி. றெக்ஸ் ஜோசப் அடிகளார், தெளிவுக்குத்தந்த சிறப்பு செவ்வி இதோ.**

**✝ மலையக மக்கள் பற்றி உங்கள் மனப்பதிவுகள்**

இந்திய வம்சாவளிச் சமூகம் தான், ஆங்கிலேயர் காலத்தின் கோப்பித்தோட்டத்திலும், தேயிலைத் தோட்டத்திலும் வேலை செய்ய கொண்டுவரப்பட்ட சமூகம். இந்தச் சமூகம் அண்மைக்காலம் வரை பல வழிகளிலும் சுரண்டப்பட்டு பாதிப்புக்குள்ளான சமூகம் ஆகும்.

இலங்கை தமிழர்களின் எண்ணிக்கையைவிட மலையகத் தமிழர் விகிதாரசாரத்தில் உயாந்து காணப்படுகிறது. இதனை ஏ.ஜி.வில்சன் எழுதிய புத்தகங்களில் புள்ளி விபரங்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் வாழ்ந்த தமிழர் சனத்தொகையை, இலங்கைத் தமிழர் - இந்தியத்தமிழர் எனப் பிரித்த போது - ஒரு குறிப்பிட்ட காலத்தில், இலங்கைத் தமிழரைவிட இந்தியத் தமிழர் அதிகமாக இருந்திருக்கின்றார்கள். அவ்வளவு எண்ணிக்கையில் பெருத்த ஒரு சமூகமாக இது இருந்தது.

அந்த நேரத்தில் நாட்டின் பொருளாதாரத்தில் முக்கியமான வருவாயைக் கொடுக்கும் தேயிலைத்தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர்களாக, இந்த நாட்டின் ஏற்றத்துக்காக உழைத்தபோதும்,



புசல்லாவை சர்வமத ஒன்றியம் மகிழ்ந்திருக்கையில்....

இந்தச் சமூகம் எப்பொழுதும் புறந்தள்ளப்பட்டு வந்துள்ளது. அரசியல் - சமூக - பொருளாதார - கல்வித் துறைகளில் பின்தள்ளப்பட்டு வந்தது.

பரம்பரை பரம்பரையாக கூலிக்கு வேலை பார்த்து, அதில் இருந்து மீளமுடியாமல் இருக்கிறார்கள். வறுமையின் பாதிப்பினால் தமது பிள்ளைகளை சிறு வயதிலேயே தம்முடன் வேலைக்கு அழைத்து செல்கின்றவர்களாக இருக்கின்றார்கள்.

மலையகத்தைப் பொறுத்தவரை கல்வியறிவு மிகவும் பின்தள்ளப்பட்டபடியால், தம்மைக் குறித்த விழிப்புணர்வு அவர்களிடம் இல்லை. தமது வாழ்க்கையைத் தீர்மானிக்க சக்தியில்லை. தூரநோக்குடன் செயற்பட முடியாமல், அந்தந்த நாள் உழைத்து, வாழ்ந்தால்போதும் என்றிருக்கின்றார்கள்.

**✝ தோட்டத் தொழிலாளர்களின் கல்வி முன்னேற்றத்தில் திருச்சபையின் பங்களிப்பு**

மலையக மக்களின் நிலைமைகளைப் புரிந்துகொண்ட திருச்சபை அவர்களது முன்னேற்றத்தில் என்ன பங்களிப்புச் செய்ததென்று பின்நோக்கிப் பார்த்தால், அவ்வளவு தூரம் அக்கறை செலுத்தவில்லையென்றுதான் சொல்லத்தோன்றுகிறது. ஏனெனில் வடக்கு - கிழக்கில் நாங்கள் பார்த்தால், கல்விக்கு திருச்சபை கொடுத்த முக்கியத்துவம் மலையகத்தில் இல்லை. இதனால்தான் வடக்கு - கிழக்கில் ஓரளவுக்கென்றாலும், பெரிய பாடசாலைகளும், கல்லூரிகளும் இருந்தன. அதனால், அச்சமூகம் மேம்பட்டு நிற்கின்றது. அந்த சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிஅத்தி வாரமாக இருப்பது கல்விதான். கல்வியினால்தான் ஒரு மனிதனது வாழ்க்கை நிலையை, தூர நோக்குடன் திட்டமிடவும், செயற்படுத்தவும், தம்மை அடக்கும் சக்திகளைப புரிந்கொள்ளவும், ஏமாற்றுப் பேர்வழிகளை இனங்காணவும் முடியும்.

மலையத்தில் திருச்சபை பாடசாலைகளை நடத்தின. இதை நாம் மறுப்பதற்கில்லை.

தோட்டத்துக்கு ஒரு பாடசாலை, கிராமத்துக்கு ஒரு பாடசாலை நடத்தினார்கள். ஆனால் அவை ஒன்றுமே பெரிய பாடசாலையாக இருந்து உயர் கல்வியைக் கொடுக்கவில்லை. மாறாக எழுத வாசிக்க கற்றுக்கொடுத்தது தவிர, சிந்தனையாளர்களையும், கல்விமான்களையும், உருவாக்கும் பாடசாலைகளாக, அவை அமையவில்லை.

கண்டிப் பகுதியில் உள்ள புனித திருத்துவக் கல்லூரியை எடுத்தால், இது அங்கிலிக்கன் சபைக் கல்லூரி. இதில் கல்வி பயிலுபவர்கள் பெரும் துறைமாரின் பிளளைகளும், பணக்காரப் பிள்ளைகளுமே தவிர, சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அல்ல. இதே தவறைத்தான் கத்தோலிக்க மதக் கல்லூரிகளிலும் காணலாம். எனவே திருச்சபை இன்றுவரை தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு கல்வியில் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றுதான் நான் சொல்வேன்.

**✝ மலையகத்தில் அரசியல்வாதிகள் செல்வாக்கு எப்படி உள்ளது?**

அரசியல்வாதிகள் தங்களுக்கு என்று தொழிற்சங்கங்களை உருவாக்கி, அதிலே தோட்ட தொழிலாளர்கள் அங்கம் வகிக்கவும் செய்து, அதன் அங்கத்தவராக சந்தாப் பணங்களை மாதாமாதம் கட்ட வைத்து, அரசியல் நடத்துகின்றார்கள்.

தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் கொடுக்கின்ற சந்தாப் பணம் அரசியல் கூட்டங்களுக்கும், விளம்பரங்களுக்கும் தான போய்ச் சேருகின்றதே தவிர சமூக முன்னேற்றத்திற்கு அல்ல.

ஆனால், தொழிலாளர்கள் கட்டாயம் ஏதோ ஒரு சங்கத்தில் அங்கத்தவராக இருக்கவேணும். ஏனெனில் இந்த தொழிற்சங்கம் கொடுத்திருக்கின்ற மனப்பதிவு, தொழிற்சங்கத்தில் நீ இருந்தால் நீ காப்பாற்றப்படுவாய். உங்கள் எல்லோரையும் முன்னேற்றுகின்றதற்கு, உறுதுணை செய்கின்றது. வேலி போட்டு உங்களை பாதுகாக்கின்றது. இதை அவர்கள் வைத்துக் கொண்டு அதில் அங்கத்தவராக இருக்கின்றார்கள்.

தொழில் சங்கங்கள் இந்த சமூகத்திற்கு பெரிதாக ஒன்றும் செய்யவில்லை. வேலை நிறுத்தம் செய்வதற்கும், விளம்பரங்கள் ஒட்டவும், மேடை அலங்காரம் செய்யவும், உபயோகிக்கப்படுகின்றார்களே தவிர, அவர்கள் மேம்பாட்டுக்கு ஏதும் செய்யவில்லை.

அரசியல்வாதிகள் மலையக மக்களின் கல்வியில் அக்கறை செலுத்துவதில்லை. ஆனால் தமது பிள்ளைகளை பெரிய பெரிய கல்லூரிகளிலும் வெளிநாடுகளுக்கும் அனுப்பி படிப்பிக்கின்றார்கள். மலையக மக்களின் உயர் கல்விக்கு உதவும் வகையில் ஆசிரியர் கலாசாலை தொழிற்நுட்பக் கல்லூரி, பல்கலைக்கழகம் அதுவும் அவர்களை இலகுவாக உள் வாங்கக்கூடிய வழிகளும் இல்லை.

நான் நினைக்கிறேன் கல்வி மக்களுக்கு முன்னேற்றத்தைக் கொடுக்கும். அதனால் அரசியல்வாதிகளுக்கு பின்னடைவு ஏற்படும், என்று கல்வியில் முன்னேறினால் தம்மைப் பார்த்து கேள்வி கேட்பார்கள் என்று பயந்து இந்திய வம்சாவழித் தமிழர்களை அடக்கி ஒடுக்கிக் கொள்கின்றார்கள் என்று சந்தேகிக்கத் தோன் றுகின்றது.

**✝ உங்கள் பணித்தளத்தில் சமாதான சிந்தனைகள் எப்படி**

சமூக தேவைகளையும், அதன் முக்கிய கடமைகளையும், நிறைவேற்றுவதற்கு நாங்கள் செயலாற்றி வருகின்றோம். எல்லா மதத்து மக்களும் இனங்களும் வாழ்கின்ற மலைய சமூகத்திலே புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும் இக் காலகட்டத்திலே அவசியமான தொன்று. இதைக் கருத்தில் கொண்டு இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையிலான புரிந்துணர்வை வளர்க்க குழுக்களாக உழைக்கின்றோம்.

பிரிவினையைப் பற்றி ஒரு கால கட்டத்திலே பேசி அதனை மேம்படுத்தி முக்கியத்துவம் கொடுத்து, அதுவே இலங்கையில் சமாதானத்தை கொடுக்கும் என்ற மனப்பதிவு இருந்தது. ஆனால், அது தவறானது. மாறாக எல்லோரும் ஒன்றிணைந்தே சமாதானத்தைக் கொண்டுவர முடியும். சமூகம் என்ற புரிந்துணர்வை எல்லோரும் கொண்டு செயற்படவேண்டும். இதற்கு கிறிஸ்தவ ஆலயம் தூண்டுகோலாக அமைய, வழிகாட்டிகள் முன்வர வேண்டும.

புசல்லாவை பிரதேசத்திலே சமாதானத்தைப் பற்றிய ஒரு கல்வி முறையை ஆரம்பித்து அதன் முக்கியத்துவம் என்ன? அவை இல்லாமல் ஏற்படும் பாதிப்பு என்ன? என்பது குறித்து ஆடல்கள், பாடல்கள், நாடகங்கள், மூலம் வெளிப்படுத்தி வழிப்பூட்டுகிறோம். இந்நிகழ்வுகளில் எல்லா மதத்தவர்களும், இனத்தவர்களும், பாடசாலைப் பிள்ளைகளும், இளைஞர்களும் பங்கு பற்றினார்கள். இன, மத பேதமில்லாமல் சமாதானத்தையும், சுவிற்சத்தையும் விரும்புகின்றதற்கு இந்நிகழ்வுகள் மலைய சமூகத்தில் ஒரு சாட்சியமாக அமைந்தது.

**✝ மலையகத்தில் சமூகசீர் கேடுகளை களைவதில் சர்வமதங்களின் செயற்திட்டங்கள் எப்படி அமைகின்றது?**

எல்லா மதத்தலைவர்களும், கோவில் பொறுப்பாளர்களும், ஒன்றிணைந்து சர்வமத ஒன்றியத்தை ஆரம்பித்து இருக்கிறோம். அதில். நாங்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை கூடி கலந்துரையாடுவோம். இவ்வாறு கூடி கருத்துப் பரிமாறும் போது எவ்வித காரணமும் கொண்டு மதத்தைப் பற்றிக் கதைப்பதில்லை, மற்றும் கருத்துப்பரிமாற்றத்தில் விவாதங்கள் இடம் பெறாமல் காத்துக் கொள்வோம்.

சர்வமத ஒன்றியத்தில் கதைப்பதெல்லாம் இன்றைய சமூகத்தில் என்ன நடக்கின்றது? அதில் நடைபெறுகின்ற தீமைகள் என்ன? இதை நிறைவேற்றுவது, திருத்துவது எப்படி? போன்ற விடயங்களே!

அதாவது சிறுவர்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகளை குறித்து கவனம் செலுத்தி அவற்றில் இருந்து மீளுவதற்கு வழிசெய்தல், சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தல், கல்வியை கொடுக்க மறுத்



புசல்லாவை சர்வமத ஒன்றியம் மகிழ்ந்திருக்கையில்....

தல், கடினமான வேலைகளை சுமத்தல், போதைவஸ்துக்கு அடிமையாக்குதல் இந்த மாதிரியான தீமைகள் சமூகத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

பெற்றோர் கூட தமது அறியாமையின் காரணத்தினால் தமது பிள்ளைகளை வேலைக்கு அனுப்பி, தமது ஏழ்மையை போக்க முயலுகின்றார்கள். இத்தகைய செயற்பாடுகளினால் பிள்ளைகள் மிகவும் பாதிப்படைகின்றார்கள். அவர்கள் வளர்ந்து வரும் காலத்தில் பெரும் வன்முறையாளர்களாக சமூகத்தில் தீமைகளை புரிபவர்களாக உருவாகுகிறார்கள்.

இதனால் சர்வமத ஒன்றியத்தினால் பாடசாலைக்குச் சென்று அதிபர் , ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கு விழிப்புண்ர்வை ஏற்படுத்துவதோடு, கிராமங்களுக்குச் சென்று பெற்றோருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். கஷ்டங்கள் துன்பங்கள் வந்தால் பிள்ளைகளை பாடசாலையில் இருந்து இடைநிறுத்தி வேலைக்கு அனுப்பாது கல்வியைகொடுக்க முயலுங்கள் உங்களுக்கு மிகவும் வறுமை என்று சொன்னால் நாங்கள் எங்களால் இயன்றளவு சிறு உதவிகளைச் செய்கின்றோம். என்று கூறி சர்வமதத்தினால் வறுமை ஒழிப்பு பணிகளையும் செய்து வருகின்றோம்.

கல்வி தான் மலையகச் சமூகம் வளர ஒரே வழி, இல்லையொன்று சென்னால் உங்கள் பிள்ளைகளும் உங்களைப் போல தேயிலைக் கொழுந்தைப் பறிக்கும் தொழிலையே செய்வார்கள். ஆகவே இது ஒரு சூழல் சக்கரம் போல மாறி மாறி ஒரே வட்டத்திங்குள்ளே தான் இருக்குமே தவிர மேம்பாடு காண முடியாது. வறுமையும் உங்களை விட்டு நீங்காது. என்று பல்வேறுபட்ட கருத்துக்களை பகிர்ந்து கொள்வோம்.

**✝ முன்னேறிய மலைய மக்களின் பங்களிப்பு எப்படி?**

படித்துப் பட்டம் பெற்ற மலையகத் தமிழர்கள் சிலர், தாம் படித்ததை மீண்டும் தமது சமூகத்திற்கு கொடுக்க முன்வருவதில்லை. தம்மை அத்தொழிலாளர் சமூகம், என அடையாளப்படுத்திக் கொள்ள விரும்பாமல் வேறோரு சமூகமாக வேறு கிராமத்தில் குடியேறுகிறார்கள்.

இதனால் அச்சமூகம் தொடர்ந்தும், வழிகாட்டிகள் அற்ற அடிமட்ட சமூகமாக இருக்கின்றது. ஆகவே எங் களால் பெரிதாக செய்து முன்னேற்ற முடியாது. எனினும் இயன்ற சிறு சிறு காரியங்களை பொதுநல நோக்கம் கொண்டவர்கள், சிறு குழுவாக இணைந்து தொழிற்படுகின்றோம்.

**✝ மலையக சமூகம் விழிப்படைய என்ன செய்யலாம்.**

தலைமுறை தலைமுறையாக அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் பேச்சு வாங்கி, பேச்சு வாங்கி, தள்ளிவைக்கப்பட்ட மக்கள் சமூகத்தை, ஒரேயடியாக முன்னேற்றம் காண உழைக்கும் போது இதில் கூட சாண் ஏற முழம்சறுக்குகிற மாதிரி சவால்கள் வருகின்றது. அதனையும் எதிர் கொண்டு உழைக்க வேண்டும்.

**✝ தெளிவு வாசகர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது?**

தெளிவு பத்திரிக்கையாளர்களுக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஏனெனில் நல்ல தமிழில் பல விடயங்களை உள்ளடக்கி வெளிவருவதினால்

நான் கூட இறைதொனி, படிகள் என்ற சிறு பத்திரிகை, சஞ்சிகைளை ஆரம்பித்தேன். அது தொடர்ந்தும் வெளியிட முடியவில்லை. காரணம் கிறிஸ்தவ விடயங்கள் உள்ளடக்கமாக இருந்ததினால் வாசகர்கள் ஆதரவு கொடுக்காமையே காரணம்.

ஆகவே கிறிஸ்தவ பத்திரிகைகளுக்கு ஆதரவு குறைவு, மற்றும் சவால்கள் அதிகம், இவற்றை எதிர் கொண்டு தொடர்ந்தும் தெளிவை வெளியிட எனது வாழ்த்துக்கள்.

தெளிவு வாசகர்களுக்கு நான் கூறும் கருத்து என்னவென்று சொன்னால், நீங்கள் வெறும் வாசகர்களாக இருக்காது, விமர்சகர்களாக இருங்கள். இதனால். தெளிவு பத்திரிக்கையாளர்கள் உச்சமாக வெளியீடு செய்ய உதவியாக இருக்கும்.

தெளிவு மேலும் வளர்ந்து ஆழமான விசுவாசப்படிப்பிணைகளையும், திருச்சபை வரலாற்றையும் கொடுக்க எனது வாழ்த்துக்களும், ஆசிகளும்.

## தெளிவுப் பெட்டகம்

### தொடர்ந்தும் நடத்தங்கள்!

தெளிவைக் குறித்து ஏற்கனவே கேள்வியுற்றேன். ஆனால், அண்மையிலேயே சபையில் இருந்து தெளிவைப் பெற்று, வாசித்து மகிழ்ந்தேன். இலங்கை திருச்சபையின் தமிழ், கிறிஸ்தவ பத்திரிகை என்ற குடையின் கீழ் வெளிவருவதைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எமது இலங்கை திருச்சபையின் தமிழ் பத்திரிகை இல்லாத இடத்தை தெளிவு நிறைவு செய்ய வாழ்த்துக்கள். **'Churchman'** னை விட முன்னுக்குவர வாழ்த்துக்கள். எமது 'சுடர் ஒளி'யைப் போல் நிறுத்தாமல் தொடர்ந்தும் நடாத்துங்கள். எமது ஒத்துழைப்பும், உதவியும் எந்நேரமும் தெளிவுக்கு வழங்குவோம்.

நன்றி.

**D.ரஞ்சித் விக்டர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிபாடு மக்கள் மயப்பட வேண்டும்

**அவுஸ்ரேலிய ஆயர்**

வழிபாடு என்பது அனைவரையும் உள்ளடக்கிய ஒன்று. எனவே எங்களின் வழிபாட்டு ஒழுங்கு எல்லோரையும் உள்ளடக்கியதாக அமையவேண்டும். மேலும் அது மக்கள் மையத்தைக் கொண்டு செயற்படக்கூடியதாகவும் பொது நிலையினர் அதிகளவு பங்காற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இவ்வாறு 09.06.2003 அன்று பிலிமத்தலாவை இறையியல் கல்லூரியின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவில், இக்கல்லூரி உருவாக்கிய முதல் ஆயரும் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட அவுஸ்ரேலியாவில் பணியாற்றும் ஆயர் றொயகேவ் ஆண்டகை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் மேலைத்தேச அமைப்புக்களில் மாற்றங்கள் உண்டுபண்ணக் கூடிய வகையில் அமைந்துவிடாது. மேலைத்தேச ஆணிவேரை அகற்ற வேண்டும்.

பழைய ஏற்பாட்டை பார்க்கும் போது சிறந்த வழிபாட்டு ஒழுங்கு போர்க்கால சூழலிலேயே எழுந்துள்ளதை பார்க்கின்றோம். அதாவது புலம்பல், தானியேலின் நூல்கள் முதலியவற்றைக் கூறலாம். இதனடிப்படையில் நெருக்கடிகள் துயரங்கள் மத்தியில் வழிபாடும் இறைவனை பார்த்து கேள்வி எழுப்பக்கூடிய வகையிலும் எமது நாளாந்த வாழ்வில் தாக்கங்களை வெளிக்கொண்டு வரக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் என்றார்.

இறையியல் கல்லூரியின் 40 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மூன்று மொழிகளும் உள்ளடங்கிய சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. இதன் முதல் பிரதியை குருநாகலை மாவட்ட ஆயர் அன்றூ குமாரகே ஆண்டகை பெற்றுக்கொண்டார்.

கடந்த 4 தசாப்பதங்காக இறையியல் கல்லூரி மாணவர்களினால் இயற்றப்பட்டு இசையமைக்கப்பட்டு வந்த சிங்கள - தமிழ் பாடல்கள் அடங்கிய ஒலிநாடா வெளிப்பட்டது. இதன்முதற் பிரதியை அருட்பணி யோசுவா இரத்தினம் அடிகள் பெற்றுக்கொண்டார்.

கல்லூரி மாணவர்களுக்கான இறையியல் கலைமாணிப்பட்டச் சான்றுதல்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

40 ஆம் ஆண்டு நிறைவு நினைவாக ஒரு பொருட்காட்சியும் ஒழுங்குபடுத்தி வடக்கு - கிழக்கு- தெற்கு - மேற்கு ஆகிய பிரதேசங்களில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஏடுகள், பிரதிகள், நூல்கள், கல்வெட்டுக்கள், கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. இத்தனை நிகழ்ச்சிகளும் யூன் 9, 10 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

## இலக்கு விளக்கு

இலட்சியம்
இன்னுமில்லை
உமக்கு
லட்சம் தாம்
தேவை" உனக்கு
பாதை
இன்னும் புரியவில்லை
ஓ... மக்கு
பயணம் தான்
பரிதாபமாய்
ஆமணக்கு

ஆஹ்
முற்கள்
மேடு, பள்ளம்
ரத்தம், பிணம், காதல்
ஆம்...
இப்பாதையில்
பயணப்படுகிறது
வாலிபம்

பூக்களா...??
புன்னகை பின்
தூக்கிப்போடு
அஞ்சாதே
வீரர் விலாசம் நீ
வீணேன்
அழிக்கிறாய்

ஒரு விதையாய்
நீ
விழுந்தால்...
விருட்சிப்பு
நாளை தான்.

இலக்கு
அஃதுதான் - உன்
சுவாசிப்பின்
விளக்கு

இளங்கவி.

## நூல்நயம்



சஞ்சிகை : தூதன் (காலாண்டு சஞ்சிகை)
ஆசிரியர் : W.போல் வில்சன்
வெளியீடு : இலங்கை ஒல்லாந்தர் சீர்திருத்த திரு அவை
முகவரி: 363, காலி வீதி, கொழும்பு 06.
விலை: வருடசந்தா 40/=

இலங்கை ஒல்லாந்தர் சீர்திருத்தச் சபையினால் வெளியிடப்படும் காலாண்டு சஞ்சிகை 'தூதன்' 46 வருடங்கள் பழமை வாய்ந்தது. இச்சஞ்சிகையின் ஆசிரியர் கடிதம், கிறிஸ்தவ விழுமியங்களுடன் யதார்த்தினை வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. மற்றும் ஒவ்வொரு இதழும் குறிப்பிட்ட தலைப்பிலான கட்டுரைகள், கவிதைகள், வேதப்படிப்பு என்ற கட்டமைப்பிலே அமையப் பெற்றுள்ளது. அட்டைப்படம் தலைப்புக்கு பொருத்தமானதைத் தெரிவுசெய்து, மிகவும் காத்திரமான ஆக்கங்கள் அமையப்பெற்றதோடு, ஆலய செய்திகளும், குறுக்கெழுத்துப் போட்டியும், சிந்திக்கத் தூண்டும் துணுக்குகளும் இடம்பெற்று இருப்பது வரவேற்றக்கத்தக்கது. எனினும் சிறுகதை, கவிதை போன்ற இலக்கிய வடிவங்கள் இல்லாமை பெரும் குறையே. அவற்றை இனிவரும் இதழ்களில் நிறைவேற்றின் சஞ்சிகை மேலும் தரமுடையதாகும்.

'தூதன்' சஞ்சிகை மேலும் வளரத் தெளிவு வாழ்த்துகின்றது.

---



சஞ்சிகை : மன்றாடல் (இருமாத சஞ்சிகை)
ஆசிரியர் : வி.பி.சத்தியேந்திரா
வெளியீடு : இலங்கை இல்லந்தோறும் நற்செய்த
முகவரி : 6, பார்க் பிளேஸ், கொழும்பு -5
விலை : வருட சந்தா 150 /=

இலங்கை இல்லந்தோறும் நற்செய்திப் பணித்தளத்தினால் வெளியிடப்படும் 'மன்றாடல்' 20 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தது. இச்சஞ்சிகையின் ஆரம்பகால ஆசிரியராக திரு.C.P. சத்தியநாதன் அவர்கள், பல்பரிமாண விடயத்தில் நடாத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

2003 ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஆசிரியராகப் பொறுப்பேற்றவர் தமக்கேயுரிய தனித்துவத் தன்மையுடன் ஆசிரியர் கடிதத்தினை எழுதியுள்ளார். இதில் இறையியலும் யதார்த்த சூழலும் பிரதிபலிக்கின்றது. மேலும் பல கட்டுரைகள், எல்லா திருச்சபைகளினதும் செய்திகள், நாடகம் போன்ற விடயதானங்கள் உள்ளடக்கியுள்ளது. அட்டைப்படம் மிகவம் கவர்ச் சிகரமாக இருப்பது சிறப்பானது.

மிகவும் காத்திரமான கட்டுரைகள் உள்ளடக்கிய போதிலும், சிறுதுணுக்குகள் - கவிதைகள் - சிறுகதைகள் இடம்பெறாமை சிறுகுறையே. இவற்றை அடுத்துவரும் இதழ்களில் நிறைவேற்றின் சஞ்சிகை மேலும் தரமுடையதாகும்.

'மன்றாடல்' சஞ்சிகை மேலும வளரத் தெளிவு வாழ்த்துகின்றது.




# அறிவும் நல்வாழ்வும் வளர வழி ஏது?

எம்முடைய கருத்துக்களை மற்றவர்கள் செவிமடுக்கவேணும் என்று விரும்புகின்ற நாம், மற்றவர்களின் கருத்துக்களையும் செவிமடுக்க ஆர்வம் காட்டவேண்டும்.

மற்றவர்களின் அனுபவப் பகிர்வும், கருத்துக்களுமே எமது அறிவின் வளர்ச்சிக்குத் துணையாகின்றது. நாம் வாசித்து அறிவினைப் பெற்றுக்கொள்வதைப் போல் ஒருவர் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களை செவிமடுப்பதே அதிகமாக ஞாபகத்தில் நிலைநிற்கின்றது.

கல்விப் புலத்தில் மாணவர்கள் செவிமடுக்கும் பண்பை வளர்த்து, ஆசிரியர்கள் கற்பிக்கும் பாடவிதானங்களை நுணுக்கமாகக் கற்றுக்கொள்ள ஆவர்வம் எடுக்கும் போதே, அவர்கள் கல்வியில் உயர்நிலை அடையமுடியும்.

அநேக மாணவர்கள், ஆசிரியர்கள் கற்பிக்கும் போது, சிந்தனைகளை சிதறடிக்கவிடடு கற்றுக்கொள்ளும் நுணுக்கத்தைத் தெரிந்து கொள்ளாததால் பரீட்சையை எதிர்நோக்கப் பயங்கொள்ளுகின்றார்கள். இதனால் பரீட்சை நெருங்கும் போது உடல் - உள நோய்கள் ஏற்பட்டு பாதிப்புக்குள்ளாகின்றனர். சிலர் பரீட்சையில் சிறந்த புள்ளிகள் எடுக்க குறுக்கு வழிகளை பயன்படுத்திக்கொள்வதும் ஆரோக்கியமான வழியாகாது.

ஆசிரியர்களும், மாணவர்களின் கருத்துக்களைச் செவிமடுத்து, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முன்வரவேண்டும். மாணவர்கள் இலகுவில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலேயே கற்பித்தல் முயற்சிகள் நடைபெறுவவேண்டும், பாடவிதானத்தை விளங்கிக் கொள்ள கடினப்படும் மாணவர்களுக்கு திரும்பத்திரும்ப சொல்லிக் கொடுக்கவும், விளங்காத அல்லது விளங்கிக்கொள்ள முடியாத பாடங்களை மாணவர்கள் ஆசிரியர்களின் துணை நாடித்தெரிந்துகொள்ள முயலும் போது, ஆசிரியர்கள் இன்முகத்துடன் தெளிவாகக் கற்பிக்கவும், ஆயத்தமாகவும் இருக்க வேண்டும். அதனை மாணவர்கள் நன்றாக செவிமடுத்து கற்றுக்கொள்ளும் போதே அறிவின் நுணுக்கத்தைத் தெரிந்துகொள்ள முடியும்.

வளர்ந்த மாணவர்களிடையே பொதுவாக ஆரோக்கியமற்ற கருத்துப் பரிமாற்றங்களே நடைபெறுகின்றது. அதாவது, பாலியல் சம்பந்தமான விடங்களும், திரைப்படக் கதைகளும், காட்சிகளும் அடுத்தவர் பற்றிக் கிண்டல் கேலி செய்யும் தன்மைகளும் அதிகமாக இருக்கின்றது. இத்தகைய கருத்துப்பரிமாற்றத்தில் நண்பர்களாக சேர்ந்து ஈடுபடுகின்றார்கள். இதனைச் செவிமடுக்க ஆர்வம் கொள்ளும் மாணவர்கள் கல்வி கற்கும் போது செலுத்துவதில்லை. எப்போதும் நாம் செவிமடுக்கும் கருத்துக்களும் நண்பர்களும் ஆரோக்கியமானவைகளாக அமையவேண்டும். அப்போதே எம் அறிவும் வாழ்வும் சிறப்புற அமையும்.

**ராதி**
**மருந்தில்லா மருத்துவம்**

கருத்தரங்குகளிலோ, பொதுக் கூட்டங்களிலோ பங்குகொள்ளும் போது அங்கு நிகழும் கருத்துப் பரிமாற்றங்களை அலட்சியமாகத் தட்டிக் கழிக்காது, நன்றாக செவி மடுக்க வேண்டும். சிலவேளைகளில் எமக்குத் தெரிந்த விடங்களைக்கூட உரையாடுகின்றபோது இது தெரிந்த விடயம் தானே என்று அசமந்தப் போக்காக இருக்கக்கூடாது, எங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டி வந்தால் அதனைத் துணிந்து கூறும் மனப்பக்குவத்தை வளர்க்க வேண்டும். இதுவே ஒரு ஆரோக்கியமான செவிமடுத்தலின் வெளிப்பாடு ஆகும்.

பாடவிதானத்தில் முன்னேற்றம் குறைந்தவர்கள். ஆசிரியர்கள் கற்பிக்கம்போது, செவிமடுக்கத் தவறியவர்களே! செவிமடுக்கும் பண்பை எமக்கிடையே வளர்த்துக் கொள்ளாதபோது உறவுகள் விரிசலடைகின்றது. நாம் பேசுவதிலும் பார்க்க கேட்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.

மாணவர்கள் தமக்கிடையே பொழுதைப் போக்க ஆரோக்கிய மற்ற முறையை கையாளாது, தமக்குத் தெரிந்த பாடத்தை மற்ற நண்பர்களுக்கும் சொல்லிக கொடுககவும், தெரியாத விடயத்தை மற்ற நண்பர்களிடம் இருந்து கேட்டு விமர்சனப்பாங்காகத் தெரிந்தகொள்ளவும், முன்வரும் போதே கல்விச் சமூக்தில் மாணவர்கள் முன்னேற்றம் காணமுடியும்.

நன்றாகப் படிக்கும் மாணவர்கள் மீது பிற மாணவர்கள் எரிச்சல் பொறாமை கொள்ளக்கூடாது. அதே நேரம் அவர்களும் பெருமை கொள்ளாது மற்றவரை மதித்துப் பழக வேண்டும்.

'மற்றவர்கள் சொல்லுவதைத் திறந்த மனத்துடன் கவனமாகக் கேளுங்கள். அவர்களும் சொல்லுவதற்கு சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கும். அவர்கள் சொல்வதற்கு மதிப்பளித்து அதிலிருந்து புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்பார் டாக்டர் வால்டர் டோயல் ஸ்டேபிள்.

ஆகவே எம் அறிவும் வாழ்வும் சிறப்பாக அமைய பெற்றோர்களினதும், ஆசிரியர்களினதும் அனுபவ முதிர்ச்சியுடையோர்களினதும் கருத்துக்களை செவிமடுப்பதே மருந்தில்லா மருத்துவம் ஆகும்.

## ஆலயம்

ஆலய மணி அடித்தவுடன்
அன்பர்கள் அனைவருமே
அன்பான உள்ளத்துடன்
அன்பு கொள்வோம்
அனைவருடனும்

ஏழை பணக்காரனென்ற
ஏற்றத்தாழ்வு இல்லாமல்
அருகருகே அமரவைப்பது
ஆண்டவரின் ஆலயமே

ஆலய நேரமதை
அநியாயம் செய்யாமல்
இறைவார்த்தையை தியானிக்க
இணைந்திடுவோம் ஆலயத்தில்

தேவனது ஆலயத்தில்
போதகரின் வார்த்தை கேட்டு
போட்டி பொறாமையின்றி
இயேசுவுக்காய் வாழ்ந்திடுவோம்.

ஒய்வு நாள் ஞாயிறிலே
ஒன்றாக நாம் சேர்ந்து
ஒரு கிண்ணத்தில் ஒற்றுமையை
வெளிப்படுத்துவோம் ஆலயத்தில்

தூய ஆவியானவரை
தூய்மையான உள்ளத்துடன்
துதித்திடுவோம் வணங்கிடுவோம்
தூய்மையான தேவாலயத்தில்

**வி.செம்சன்**
**தூய ஆவியானவர் ஆலயம், வவுனியா.**

---

### தபால் மூலம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செயற்பாடுகள், தபால் மூலம் விடை எழுதி அனுப்ப வேண்டிய கேள்வி கள் இவ்வுள்ளடக்கத்திலேயே புத்தகங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், நடைமுறைப்படுத்தப்படும் இத்தபால் மூலக்கல்வியானது வயது- பால் - இன - சபை- பிரதேச வேறுபாடுகளின்றி, வேதாகமத்தை விடுதலை சிந்தையுடனும், யதார்தத நிலையுடனும் புரிந்து கொண்டு இறையாட்சியை இவ்வுலகில் நிலை நாட்ட ஓர் அரிய வாய்ப்பு. படித்துப்பயன் பெறுங்கள்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி யாழ். திருச்சபை திருப்பணி மன்றம், யாழ். குரு முதல்வர் காரியாலயம், 452 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### அன்னை தெரேசா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இல் அன்னை தெரெசாவுக்கு உலக அமைதிப் பணிக்காக நோபல் விருதை வழங்கிக் கௌரவித்தது.

இவர் 1997 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் காலமானார். மனித நேயத்தின் சிகரமான அன்னை தெரேசாவின் மறைவிற்காக முழு உலகும் உணர்வு பூர்வமாக அஞ்சலியைச் செலுத்தியது.

அன்னையின் புனித வாழ்வினை உலகமே கண்டு வியந்தது. இன்று உலகம் முழுவதும் பரவி வியாபித்து இருக்கும் அன்னையின் மனிதாபிமானப் பணி போற்றுதற்குரியது.

வாழ்வால் பணியாற்றிய அன்னைக்கு இவ்வருடம் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி புனிதர் பட்டத்திற்கு முன்னதான அருளாளர் பட்டத்தினை திருத்தந்தையினால் வத்திக்கானில் அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org